(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அட்ஜென்மெண்ட் மோஷன்' பற்றி இப்போது சொல்லியாகிவிட்டது. அமைச்சரின் ரிப்ளை இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன். ஒரே ஒரு விஷயம். இந்தச் சபையும், மக்களும் தெரிந்துகொள்வதற்காக ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து, ஓர் உறுப்பினர் இப்படி ஒரு தவறு நடைபெற்றிருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா, தெரியாதா என்று கேட்கிற போது, சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அவையில் இல்லையென்றால் பரவாயில்லை. அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எழுந்து விவரம் சொல்லுகிறேன் என்று சொல்லலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் சொன்னேன், என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று. அவருக்கு நோட்டீஸ் கொடுத்தால் பிறகு அவர் விளக்க வர முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். முத்துராமலிங்கம் எழுப்பியுள்ள பிரச்சினையில் தெளிவு பெற விரும்புவதில் தவறில்லை. குறுகியகால கேள்வியாகக் கேட்டால் முழு விவரத்தையும் சொல்லலாம். அல்லது கேள்வியாகக் கேட்கலாம். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் கொண்டு வரலாம். விவாதத்தின் மீது சொன்னால் பதில் சொல்லலாம். பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து, நேற்று நடந்ததாக இருந்து உடனடியாகச் சொல்லக் கூடிய நிலைமையில் இருந்தால் குறுகியகாலக் கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் கேட்டு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். விளக்கம் பெற விரும்புவதில் தவறில்லை. ஆனால் அதற்கான ஒரு முறையைக் கையாள வேண்டுமென்றுதான் மாண்புமிகு தலைவர் அவர்கள் கருதுகிறார்கள்.

(முற்பகல் 10-40)

(ஈ) நீக்கம் செய்வது குறித்து.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் இந்தச் சபையிலே பேசிய பேச்சுக்கள் அனைத்தும் குறிப்பிலே இருக்குமென்றுதான் இந்தச் சபையிலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் நம்பிக்கொண்டிருக்கிறோம். அவையில் நேற்றைய தினம் விவாதம் நடைபெற்றபோது, அவற்றிலே சில பகுதிகளை நீக்க

சபையினுடைய தலைவருக்கு உரிமை இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. இருந்தாலும், நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று பேரவைத் துணைத் தலைவர் அதை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணிவிட்டார். அதைப் பற்றித் திரும்பப் பேச வேண்டியதில்லை.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சொல்வதெல்லாம் நீக்குவதற்கு அவர்களுக்கு. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்புகளை என்னிடத்திலே கொடுத்தால், ஒப்பிட்டுப் பார்த்து, தவறு இருக்கிறதா என்று பார்க்க முடியும். தவறு நேர்ந்திருந்தால் அதைத் திருத்த முடியும்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : இங்கே, குறிப்புகளிலே, பேசாததுபோல் இருக்கிறது. இந்தச் சபையிலே நடைபெறும் விவாதங்களின் குறிப்புகள் மாற்றப்படுமா ? சுருக்கெழுத்தாளர்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பகுதியை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணினால், அது குறிப்பிலிருந்து எடுக்கப்படும். இங்கே குறிப்பெடுப்பது 'வெர்பாடிம் ஸ்பீச்' தான். பேசுவது அப்படியே தான் இருக்கும் 'கலோகியல்' ஆகப் பேசினால்கூட அப்படியே இருக்கும்.

(ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் பெயர் அழைப்பிதழில் அச்சடிக்கப்படுவதும் குறித்து—தொடர்ச்சி.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு மதுராந்தகம் வட்டத்தின் சார்பில் கூட்டுறவு வார விழா நடைபெறுகிறது. மதுராந்தகத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் மதுராந்தகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். அழைப்பிதழிலே என்னுடைய பெயரைப் போடவில்லை. இன்றைக்கு மாலையிலே விழா தொடங்க இருக்கிறது. இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை. ஆனால் இந்த நேரத்திலே பேரவைத் தலைவரவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். தொடர்ந்து எதிர்க் கட்சி உறுப்பினர்களை இப்படி விலக்கி வைத்துவிட்டு விழா நடத்துவது ஆளுங் கட்சிக்கு நியாயம் தானா ?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS